செ.வெ.எண் : 16/ ஜூலை நாள் : 14.07.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## 1971 ஆம் ஆண்டு போரில் இந்திய தேசம் அடைந்த வெற்றியின் 50-வது ஆண்டு நினைவாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்தடைந்துள்ள "வெற்றிச் சுடர்"-க்கு

**மாவட்டஆட்சித் தலைவர்முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப.,அவர்கள் மரியாதை.**

1971 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் போரில் இந்திய தேசம் அடைந்த வெற்றியின் 50-வது ஆண்டு நினைவாக, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்தடைந்துள்ள "வெற்றிச் சுடர்"-ஐ, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் சீர் நெறிமுறைப்படி (Protocol) பெற்றுக் கொண்டு மரியாதை செலுத்தினார்கள். (14.07.2021)

1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் போரில் இந்திய தேசம் அடைந்த வெற்றியை நினைவு கூறும் வகையில் பொன்விழா கொண்டாட்டங்கள் 2020-டிசம்பரில் தொடங்கியது. தேசிய போர் நினைவுச் சின்னத்தில் உள்ள தீச்சுடரில் இருந்து நான்கு வெற்றி சுடர்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு வெற்றிச் சுடரும் 1971 போரில் பங்கேற்ற வீரர்கள் மற்றும் உயிர்நீத்த வீரர்களின் தியாகங்களை கவுரவிக்கும் விதமாக அவர்களது ஊர்கள், நகரங்கள்/கிராமங்கள் வழியாக கொண்டு செல்லப்படுகின்றன.

அதன்படி, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்தடைந்துள்ளது "வெற்றிச் சுடர்"-ஐ மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் சீர் நெறிமுறைப்படி பெற்றுக் கொண்டு, மரியாதை செலுத்தினார்.

INS பருந்து லெட்டினண்ட் கமாண்டர் திரு.அருள் ஜீவா கனி தலைமையில் கடற்படை வாகனத்தில் வீரர்கள் மரியாதையுடன் கொண்டு வரப்பெற்றது. மேலும், இந்த வெற்றிச் சுடர் 1971 போரில் பங்கேற்ற இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த வீரர்கள், உயிர்நீத்த வீரர்களின் ஊர்கள், இராமேஸ்வரம், தனுஸ்கோடி, உச்சிப்புளி அருகே உள்ள INS பருந்து கடற்படை தளம் ஆகிய இடங்களுக்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. தொடர்ந்து, இந்த வெற்றிச் சுடர் மதுரை மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

இந்த நிகழ்வின் போது, கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.காமாட்சி கனேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.இரா.பழனிகுமார், முன்னாள் படைவீரர்கள் நல உதவி இயக்குநர் திரு.எஸ்.மதியழகன், உட்பட INS பருந்து கடற்படை வீரர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்திமக்கள் தொடர்புஅலுவலகம், இராமநாதபுரம்.**